# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச்சங்கங்களின் தேர்தல் ஆணையம்

273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018

திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,

ஆணையர்

ந.க.எண்.1259/2021/கூதே.2 (1) நாள். 05.09.2022

## தேர்தல் திட்டம் (EP(CV) No. 01/2022)

## (Communication of Election Programme)

(1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கவிதிகள், விதி எண்.52(5)-ன் கீழ்

*****

1983-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டம், பிரிவு 33-A-ன் கீழ் அமைக்கப்பட்டு, 1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கவிதிகள், விதி எண்.52 மற்றும் 53-ல் விவரித்தபடி தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின்தேர்தல்களை நடத்துவதற்கு, சட்டப்பிரிவு 33(11) மற்றும் விதி எண் 52-A-ன் படி தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், (இனி ஆணையம் எனப்படும்), விதி எண். 52 (5)-ன் கீழ் இணைப்பு 1-ல் தரப்பட்டுள்ள விவரப்படியான கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்பட்டுள்ள நிர்வாகக்குழு உறுப்பினர்கள் காலியிடங்களுக்கான (Casual Vacancies) தேர்தல்களை நடத்துவதற்கு இணைப்பு 2-ல் கண்டுள்ளபடியான தேர்தல் திட்டத்தை இதன் மூலம் அறிவிக்கிறது.

2. **மாநில தேர்தல் அலுவலர் (State Election Officer):**

1) இத்தேர்தல் திட்டத்தை தொடர்புடைய சங்கங்கள் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு தெரிவித்துவிடவும்,

2) விதி 52-A(3)-ல் சொல்லப்பட்டபடி ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வெளியிடல், தேர்தல்களை நடத்த ஒத்துழைத்தல் மற்றும் மேற்பார்வை செய்திடல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

3. **மாவட்ட தேர்தல் அலுவலர்கள் (District Election Officers):**

1) 1983 –ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள் விதி எண் 52(6)(a) மற்றும் (b) –ல் சொல்லப்பட்டபடி தேர்தல் அறிவிப்பை வழங்கிடவும்,

2) விதி எண் 52(1)(c) மற்றும் விதி எண் 52(3)(a)-ல் சொல்லப்பட்டபடி முறையே வாக்காளர் பட்டியல் அலுவலர் (Electoral Officer) மற்றும் தேர்தல் அலுவலர் (Election Officer) ஆகியோரை நியமித்திடவும்,

3) விதி எண், விதி 52 மற்றும் ஆணையத்தால் இது தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் கட்டளைகள்படி தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடப்பதை ஒருங்கிணைப்பு செய்தும், ஒத்துழைத்தும் மற்றும் உறுதி செய்திடவும்,

4) தேர்தல் ஆணைய சுற்றறிக்கை ந.க.321/2018/கூ.தே.1, நாள் 19.07.2018-ல் குறிப்பிட்டுள்ளவற்றையும் கவனத்திற் கொண்டு வேட்பு மனு பெறுதல், பரிசீலனை, ஏற்பு ஆகிய நடவடிக்கைகள் சட்ட விதிகளின்படி முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும்,

5) போதிய காவல் துறை பாதுகாப்பு மேற்கொள்ளவும் வேட்பாளர்கள் விருப்பப்படின் அவரவர் தம் சொந்த செலவில் ஒளிப்பதிவு (Video Coverage) மேற்கொள்ள அனுமதி வழங்கிடவும்,

6) ஒவ்வொரு தேர்தல் நடவடிக்கைகள் முடிவுற்றவுடன் அதுபற்றிய சட்டப்பூர்வ அறிக்கையினை ஆணையத்திற்கு அனுப்பிடவும்,

7) மேலும் இத்தேர்தல் திட்டப்படியான தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நிலையிலும் குறிப்பாக உறுப்பினர்கள் பங்கேற்கக் கூடிய வேட்பு மனுதாக்கல், வாக்குப்பதிவு, வாக்கு எண்ணுகை மற்றும் முடிவு அறிவித்தல் போன்ற நடவடிக்கைகளின் போது அரசால் அறிவிக்கப்பட்டுள்ள (Covid - 19) தொற்று தடுப்பு விதிமுறைகளான, சமூக இடைவெளியினைப் பின்பற்றுதல், முகக்கவசம் அணிதல், உள்ளிட்ட அனைத்து அறிவுரைகளையும் தவறாது கடைபிடிக்கவும் அறிவுறுத்தப்படுகிறது.

**4. <u>இத்தேர்தல் திட்டம் தொடர்புடைய சங்கங்கள்:</u>**

இச்சங்கங்கள் தங்களுக்கு ஏற்பட்ட சட்டப்பூர்வ கடமைகளை விதி எண். 52(19)-ல் சொல்லப்பட்ட படியும், இதர வகையிலும், குறிப்பாக விதி எண் 52 (6)(d), (6)(e), (7)(a), (7)(c) மற்றும் (10)(a)-ன் படியும் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு :மேற்கண்டவாறு

ஓம்/-

ஆணையர்

ஆணையருக்காக

**பெறுநர்:**

1. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத்துறை இயக்குநர் / மாநில தேர்தல் அலுவலர், சென்னை – 32.
2. தொடர்புடைய மாவட்ட தேர்தல் அலுவலர்கள்
3. இணைப்பில் உள்ள சங்கங்கள் – மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மூலமாக

} தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைக்காகவும் (மின்னஞ்சல் மூலம்)

**நகல்:**

1. தலைமைச் செயலர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9
2. அரசு முதன்மைச் செயலர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புதுறை, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9
3. அரசு செயலர், குறு, சிறு மற்றும் நடுத்தத் தொழில் நிறுவனங்கள் துறை, சென்னை-9
4. கூடுதல் தலைமை செயலர், உள்துறை, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை – 9
5. காவல்துறை இயக்குநர், மயிலாப்பூர், சென்னை – 4.
6. தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
7. தொடர்புடைய மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள்
8. தொடர்புடைய தேர்தல் பார்வையாளர்கள்

} தகவலுக்காக (மின்னஞ்சல் மூலம்)

| இணைப்பு - 1 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை-18 | | | | | | |
| ந.க.எண். 1259/2021/கூதே2(1) EP(CV) - 01/2022 | | | | | | |
| மாநில தேர்தல் அலுவலர்: தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத்துறை இயக்குநர் | | | | | | |
| வ. எண் | மண்டலம்/ சரகம் | சங்கத்தின் பெயர் | தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் | | | |
| | | | ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் | மகளிர் | பொது | மொத்தம் |
| 1 | காஞ்சிபுரம் | செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்ட சிறு அச்சக சேவை தொழிற்கூட்டுறவுச் சங்கம் | 1 | 2 | 0 | 3 |
| 2 | தூத்துக்குடி | எல்ஸ்மிக் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற்கூட்டுறவுச் சங்கம் | 0 | 0 | 2 | 2 |
| 3 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி மாவட்ட சிறு தொழில் சேவை தொழிற்கூட்டுறவுச் சங்கம் | 0 | 0 | 1 | 1 |
| 4 | ஈரோடு | தமிழ்நாடு பாதுகாப்பு கண்காணிப்பு உபகரணங்கள் மற்றும் மின்சாரம், மின்னணு முதலீட்டு நிறுவல் மற்றும் சேவைகள் தொழிற்கூட்டுறவுச் சங்கம் | 0 | 0 | 1 | 1 |
| 5 | ஈரோடு | ஈரோடு மாவட்ட கால்டாக்சி ஓட்டுனர்கள் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம் | 0 | 3 | 0 | 3 |
| மொத்தம் | | | 1 | 5 | 4 | 10 |

ஒம்/-
ஆணையர்

ஆணையருக்காக

இணைப்பு – 2

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18**

(தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள், 1988, விதி எண். 52 (5 )– ன் கீழ்)

ந.க.எண். 1259/2021 /கூ.தே2 (1) தேர்தல் திட்டம் எண் – EP(R)No. 01/2022

| வ. எண் | விவரங்கள் | நாள் |
|---|---|---|
| 1 | மாவட்ட தேர்தல் அலுவலரால் தேர்தல் அறிவிப்பு வெளியிடும் நாள் | 12.09.2022 |
| 2 | சங்கம் உறுப்பினர் பட்டியலை சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | 13.09.2022 |
| 3 | வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு சங்க உறுப்பினர் பட்டியல் அளிக்க வேண்டிய நாள் | 13.09.2022 |
| 4 | வாக்காளர் பட்டியல் அலுவலர் சங்க அறிவிப்பு பலகையில் வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் | 14.09.2022 |
| 5 | வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு சங்கம் உறுப்பினர் பட்டியல் அளிக்காத நேர்வில் வாக்காளர் பட்டியல் அலுவலர் வாக்காளர் பட்டியலைத் தயாரித்து சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | 14.09.2022 |
| 6 | வாக்காளர் பட்டியலுக்கு உறுப்பினர் கோருரிமை அல்லது மறுப்பு தெரிவிக்கும் நாள் | 16.09.2022 நேரம் 10 மு.ப முதல் 5 பி.ப |
| 7 | வாக்காளர் பட்டியலுக்கு கோருரிமை அல்லது மறுப்பு தெரிவித்தது குறித்த வாக்காளர் பட்டியல் அலுவலரின் முடிவுகள் சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | 19.09.2022 நேரம் 10 மு.ப முதல் 4 பி.ப |
| 8 | வாக்காளர் பட்டியல் அலுவலர் சங்க அறிவிப்பு பலகையில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் | 19.09.2022 நேரம் 5 பி.ப |
| 9 | வேட்பு மனு தாக்கல் செய்யப்பட வேண்டிய நாள் | 22.09.2022 நேரம் 10 மு.ப முதல் 5 பி.ப |
| 10 | வேட்பு மனு பரிசீலனை | 23.09.2022 நேரம் 11 மு.ப முதல் 4 பி.ப |
| 11 | செல்லத்தக்க வேட்பு மனுக்கள் பட்டியல் வெளியிடுதல் | 23.09.2022 நேரம் 5 பி.ப |
| 12 | வேட்பு மனு திரும்பப் பெறுதல் | 24.09.2022 நேரம் 10 மு.ப முதல் 4 பி.ப |
| 13 | போட்டியிடும் வேட்பாளர் இறுதி பட்டியல் வெளியிடும் நாள் | 24.09.2022 நேரம் 5 பி.ப |
| 14 | தேவைப்படும் நேர்வில் வாக்குப்பதிவு நடைபெறும் நாள் | 29.09.2022 நேரம் 8 மு.ப முதல் 5 பி.ப |
| 15 | ஓட்டு எண்ணுகை மற்றும் தேர்தல் அலுவலரால் தேர்தல் முடிவு அறிவித்தல் | 30.09.2022 நேரம் 10 மு.ப முதல் |

ஒம்/–

ஆணையர்

ஆணையருக்காக